# பின்னை நவீனத்துவ நோக்கில் பித்தனின் அடையாளம்– கவிதை ஒப்பீடு

# Pithan's Identity in Post-Modernism – A Poetic Comparison

***சு. தமிழ்ச்செல்வன்***
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
தமிழ்நாடு மத்தியப் பல்கலைகழகம், திருவாரூர்

**S. Tamilselvan**
*Ph.D Research Scholar*
*Department of Tamil*
*Central university of Tamilnadu, Thiruvarur*

## ஆய்வுச் சுருக்கம்

*பின்னை நவீனத்துவ நோக்கில் ஆழியாள்து விதம் கவிதை தொகுப்பில் உள்ள அடையாளம் கவிதையை, அப்துல்ரகுமானின் பித்தன்க விதை தொகுப்பில் உள்ள இணை என்ற கவிதையோடு ஒப்பிட்டு பின்னை நவீனத்துவ நோக்கில் பொருள் புலப்படுத்துதல்.*

***முக்கியச் சொற்கள்:*** *அடையாளம், இணை, பின்னை நவீனத்துவ, பித்தன், துவிதம்*

## Abstract

*Comparing the poem "Identity" in Aaliyal Tuvidam collection of poetry with the poem "Inna" in Abdul Rahman's pittan poetry collection from the perspective of post-modernism.*

***Keywords:*** *Identity, Iai Postmodernism, Pithan, Tuvitam*

## Citation

Tamilselvan, S. "Pithan's Identity in Post-Modernism - A Poetic Comparison." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 71–76.

**முன்னுரை**

*இன்றைய சூழலில் ஒரு கவிதை என்பது பலபரிணாமங்கள் உடையதாக பார்க்கபடுகிறது. ஆசிரியர் படைப்பினை படைத்த பின்பு படைப்பில் இருந்து துண்டாடப்பட்டு படைப்பு அடையாளம் அற்ற மனிதனாகிறது, ஆசிரியரும் ஒர் விமர்சகன் ஆகிறார், இதன் மூலம் படைப்பு தனக்குள் தக்கவைத்த பலபொருள் முடிச்சிகளை அவிழ்க்க முடிவதோடு படைப்பு அனைவருக்கும் உடையதாக மாறிவிடுகிறது. ஆழியாள் எழுதியது விதம் கவிதை தொகுப்பில் உள்ள அடையாளம் கவிதையை, அப்துல்ரகுமான் பித்தன் கவிதை தொகுப்பின் இணை என்ற கவிதையோடு ஒப்பிட்டு காண்போம்.*


**அடையாளம்**

*அடையாளம் அற்ற அடையாளத்தை உடையோர், தனக்கென தனித்த அடையாளத்தை தாங்களே உருவாக்கி வாழப்பழகிப் போன பின்பு, அடையாளம் இல்லாது வாழ முடியவில்லை. உலகமே ஆடையோடு இருக்க நாம் ஒருவர் மட்டும் அம்மணமாக நிற்பது*


*கொடுமை. அடையாளத்தை உருவாக்ககற்றோர், பிறர் அடையாளத்தை அழிக்கவும் செய்வோர். இந்த வாழ்வில் ஒரு மனிதனுக்கு எத்தனை அடையாளம் இதை ஆழியாள் கவிதையில் காண்போம்.*

| | |
|---|---|
| *பிறந்த வீட்டில்* | *மீன்பாடும் கிழக்கில்* |
| *கறுப்பி* | *நனோர் மலைக்காரி* |
| *அண்டை நாட்டில்* | *மலையில்* |
| *சிலோன் அகதிப் பொண்ணு* | *மூதூர்காரியாக்கும்* |
| *இலங்கை மத்தியில்* | *ஆதிக்குடிகளிடம்* |
| *தெமள* | *திருடப்பட்டதீவாயிருக்கும்* |
| *வடக்கில்* | *என்பு குந்த நாட்டில் அப்பாடா* |
| *கிழக்கச்சி* | *பழையபடி நான் கறுப்பியானேன்* |


***(துவிதம் - மு.ப - 2006,ப - 55)***




*நம் அடையாளத்தை நாம் முடிவு செய்வதோடு, பிறர் முடிவு செய்வதே அதிகம் எனினும் இங்கே பிறந்த வீட்டில் கறுப்பி என்பது ஒரு நிற ஒடுக்கு முறை மற்றும் உரைபோன் உறவு அடிப்படையில் அது அன்பாகவும் உள்ளது.*




*இங்கே எதுமையம் எது விளிம்பு என்பதை நோக்குவோனே தீர்மானிக்கிறார். அப்பாடா பழையபடி நான் கறுப்பி ஆனேன், என்ற வரியில் பல அடையாளம் கண்டு சலித்து போன நிலையில் மீண்டும் கறுப்பி என்று அடையாளம் ஆனால் இங்கே*




*இங்கே நோக்குவோன் யார் எனில் ஆதிக்குடிகளிடம் திருடப்பட்ட தீவாயிருக்கும் என் புகுந்தவீடு ஆஸ்திரேலியா அங்கே மீண்டும் கறுப்பி என்ற அடையாளம் வந்தது. இந்த முறை அன்பு என்பது விலகி இன ஒடுக்குமுறை உள்நுழைந்தது. எனவே யார் யாரை அடையாளம் படுத்துகின்றனர் என்ற அடிப்படையில் தான் மொழியின் பொருள் மையமாகிறது.*


**இணை**

*ஒற்றை பரிணாம கவிதைகள் இருக்க, இரண்டை பரிமாண நோக்காக நோக்க சொல்லும் ரகுமானின் இணை கவிதையை இங்கு காண்போம்.*

| | | |
|---|---|---|
| *“நீ முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறாய்” என்றேன் பித்தனிடம்.* | *கத்திகள்* | *நீங்கள் தராசுத் தட்டாய் இருக்கிறீர்கள்.* |
| *“அரைகுறையினிடம் தான் முரண்பாடு இருக்காது; நான் முழுமையானவன்” என்றான் பித்தன்.* | *தாள் வெண்மையாகவும் மை கறுப்பாகவும் இல்லையென்றால் எழுதுவது எப்படி ?* | *நானோ தராசாக இருக்கிறேன்.<br><br>இதுதான் உங்களுக்கும் எனக்கும் உள்ள வேறுபாடு.* |
| *அவன் மேலும் சொன்னான்: முரண்கள் தாயின் இரு முலைகள். நான் இரண்டிலும் பால் குடிக்கிறேன்.* | *படைப்பு ஒரு கண்ணாடி அதில் ஒவ்வொன்றுக்கும் எதிர் பிம்பம் உண்டாகிறது.* | *(பித்தன், ப.ப-2022, ப-101)<br>இணை<br>முன்பின் மேல்கீழ் தொடக்க முடிவு<br>விழிப்பு உறக்கம் உண்டு இல்லை நன்மை தீமை* |

| | | |
|---|---|---|
| கவனி.<br>முரண்<br>வெறும் உத்தியல்ல;<br>அது பிரபஞ்ச ரகசியம். | "முன்னால் பின்"<br>உண்டாகிறது. | |
| நான் அதன் முகத்தைத் திரை விலக்கிப்<br>பார்த்து விட்டேன். | "மே"லால்<br>"கீழ்" உண்டாகிறது. | |
| முரண்கள் | "தொடக்க"த்தால்<br>"முடிவு" உண்டாகிறது. | |
| இரு கரைகள்.<br>நடுவில் ஓடும்<br>நதி நாம். | "விழிப்"பினால்<br>"உறக்கம்" உண்டாகிறது. | |
| ஒற்றைக் கரை நதி இருக்க<br>முடியாது. | "உண்"டால் "இல்லை"<br>உண்டாகிறது. | |
| இரு பக்கம் கொண்ட<br>நாணயம் நாம். | "நன்மை"யால்<br>"தீமை" உண்டாகிறது. | |
| ஒரு பக்க நாணயத்தைச்<br>செய்ய முடியாது. | ஒன்று இல்லையென்றால்<br>இன்னொன்று இல்லை. | |
| குறுக்கும் நெடுக்குமாக<br>ஓடும் நூல்களால்<br>நெய்யப்பட்டவர்கள் நாம். | கவனி;<br>முரண்கள்<br>எதிரிகள் இல்லை;<br>இணைகள்;<br>ஒட்டிப் பிறந்த<br>இரட்டைப் பிறவிகள்;<br>கள்ளக் காதலர்கள்.<br>நீங்கள்<br>பூக்களிடம் மட்டும்<br>அழகைப் பார்க்கிறீர்கள்; | |
| அதனால் தான் உறுதியாக<br>இருக்கிறோம். | நானோ<br>முள்ளிடமும் பார்க்கிறேன். | |
| ஒற்றைச் சிறகால் | நீங்கள்<br>ஒளியைப் புகழ்கிறீர்கள்;<br>நான் இருளையும்<br>ரசிக்கிறேன். | |
| பறவை பறக்க முடியாது? | நீங்கள்<br>எதை வெறுக்கிறீர்களோ<br>அதுவும் உங்களுக்கு<br>உதவுகிறது என்பதை நீ<br>ங்கள் உணர்வதில்லை. | |

| | | |
|---|---|---|
| எலும்பும் தசையுமாக இல்லையென்றால் உடல் எப்படி இயங்கும்? | நீங்கள் குப்பைத் தொட்டியில் எறியும் குழந்தைகளை நான் எடுத்துக் கொஞ்சு கிறேன். | |




*மையம் விளிம்பு என்ற இருநிலையும் இக்கவிதையுள் காணலாம், எதுமையம் எது விளிம்பு என தீர்மானிப்போர் நோக்குவோனே! இரண்டையும் உணர்ந்து செயல்படுவதை அறியலாம்.*

**பித்தன் அடையாளம் பின்னை நவீனத்துவ ஒப்பீடு**

*ஒன்றிணை நோக்க ஒன்றே தெரியும், அதிலேயே வேறு ஒன்று நோக்க வேறு ஒன்றும் வெளிப்படும். எனவே இரண்டு மட்டுமே என்று சொல்லாது, இவை இல்லாது வேறு சிலவும் அதில் புதைந்து உள்ளதை காலக்கருவி கொண்டு தோண்ட தோண்ட வெளிப்படுவதை உணரலாம்.*

*இங்கே நாம் இரண்டினை மட்டுமே உணரமுடிகிறது, எனினும் இவை இணைகள், எதிரிகள் இல்லை என்பதை உணரும் போது மூன்றாவது பரிமாணம் தோன்றியது.*

***“முரண்கள்***
***வெறும் உத்தியல்ல***
***அது பிரபஞ்சரகசியம்”***

*ஆம் ஒன்றை மையமாக மற்றொன்றை விளிம்பாக பார்த்த காலம் கடந்து, இரண்டை தாண்டி இரண்டு இணைகள் இணைந்த மூன்றாவது பரிணாமம் மற்றும் அதுவல்லாது வேறு ஒன்று என பல பரிணாமத்தை ஒரு பிரதிதனக்குள் பொதித்துள்ளது.*

***“நீங்கள்***
***தராசு தட்டாக***
***இருக்கிறீர்கள்***
***நானோ***
***தராசாக இருக்கிறேன்”***

*எல்லா மையமும் ஒன்றின் விளிம்பே, எல்லா விளிம்பும் ஒன்றின் மையமே, இதை ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வோன்றும் அதிகாரம் ஆகும் போது தன்னை பிறவற்றில் இருந்து முன் நிறுத்தி பிறவற்றை பின்னுக்கு தள்ளுகிறது. (பின்- நவீனத்துவ-மு.ப-2004,ப - 87) எனவே மையம் என்பது காலம் எனும் கருவி கொண்டு அமைவது. இங்கே கவிதை ஊடாக இதை நாம் உணர்வதோடு ஒரு பனுவலின் அர்த்தத்தை தீர்மானிப்பது அதன் புறச்சூழலே (செவ்விலக்கிய - ப - 155) கவிதையை படைத்த கவிஞர் மூலமாக கூட தனது கவிதை பொருளை*

*நிர்ணயம் செய்ய முடியாது, முடிந்தாலும் அது பொருளின் ஒரு கூறே என்று உணரலாம். ஒரு படைப்பின் பொருள் நோக்குவோன் இடத்திலேயே பொருள் கொள்ளப்படுகிறது. இதில் மூல வாசிப்பாளன் சிந்தனையை மறுப்பது சில வேளைகளில் அவன் சிந்தனை வலையில் வாசகன் சிக்குவதும் உணரலாம்.*

**முடிவுரை**

*பின்னை நவினத்துவ நோக்கு என்பது கட்டமைப்பு அற்றகட்டைப்பாக உள்ளது. இது கவிதை கட்டமைப் பின் ஊடாக மட்டும் அன்றி புறச்சூழல் மூலமாக பொருள் புலப்படுத்துகிறது. இது வாசிப்பாளனுக்கு சுதந்திரம் அளிக்கிறது. அடையாளம் இணை கவிதைகளின் வழி இந்த பின்னை நவீனத்துவ நோக்கினை நாம் உணரலாம், எனினும் அடையாளம் கவிதையில் இரண்டாக உணர்ந்தது, இணை கவிதை மூன்றாக உணர்ந்தது காலம் இனி அதில் புதைந்து உள்ள பல பரிணாமங்களை வெளிக்காட்டும் என முடிவற்ற முடிவாக சொல்லலாம்.*

**துணை நூற்பட்டியல்**


1. *அப்துல்ரகுமான் - (2022), பித்தன், நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை - 600017*
2. *ஆழியாள் - (2006), துவிதம், மதுபாஷினி, ஆஸ்திரேலியா*
3. *எம்.ஜி.சுரேஷ் - (2004), பின் - நவீனத்துவம் என்றால் என்ன, புதுப்புனல், சென்னை - 23*
4. *ஆர். முத்துராஜன்- (2015), செவ்விலக்கிய கவிதை மரபும் ஆய்வும், காவ்யா பதிப்பகம், சென்னை - 600024*


## References


1. Abdul Rahman - (2022), pithan, National Publishers, Chennai - 600017.
2. Aaliyal - (2006), Tuvidham, Madhubashini, Australia.
3. M.G. Suresh - (2004), pin & naveenathigam Endral Yenna, Putupunal, Chennai - 23.
4. R. Muthurajan - (2015), sevvilakkiya kavithai paravum aayivum, Kavya Publishing House, Chennai - 600024.